# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## தகைமைகள்

## மருத்துவ பீடம்

**01. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I /II**

1. விண்ணப்பதாரர்கள் 721 ஆம் இலக்க UGC சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கப் பதவியின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறு விரிவுரையாளர்களுக்கான கல்வித் தகைமைகளை (தகுதிகாண்) (மருத்துவ /பல் மருத்துவ) பெற்றிருத்தல்.

அத்துடன்

2. (i) தேவைப்படுத்தப்படுமிடத்து ஒரு டாக்டர் பட்டத்தை அல்லது MD/MS மற்றும் மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் வழங்கும் சபை சான்றிதழை அல்லது அதற்கு சமனான சான்றிதழை பெற்றிருத்தல்.

அல்லது

(ii) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் குழுவின் சிபாரிசின் பேரில் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்படலாம் எனும் அத்தகைய தொழில் தகைமைகளையும் அனுபவத்தையும் பெற்றிருத்தல்.

அத்துடன்

3. (a) **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I இற்கு** - ஆகக்குறைந்தது பதினொரு (11) வருட கால அனுபவத்தை பெற்றிருத்தல் [அதில், மேற்குறித்த 2 இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றதன் பின்னர் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்].

(b) **சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இற்கு** - பின்வரும் விடயங்கள் ஒன்றில் அல்லது அதற்கு அதிகமானவற்றில் ஆகக்குறைந்தது ஆறு (06) வருட அனுபவத்தை பெற்றிருத்தல்:

(i) பல்கலைக்கழக மட்டத்தில் கற்பித்தல்
(ii) தொழில்சார் அனுபவம்
(iii) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் ஆராய்ச்சி
(iv) பட்டப்பின்டிப்புக் கற்கைகள்

தயவுசெய்து 1997.11.21 ஆம் திகதிய 721 ஆம் இலக்க UGC ஆணைக்குழு சுற்றறிக்கையின் பதவி 4 இன் கீழ் தரப்பட்டுள்ள குறிப்புகளை / விஷேட குறிப்புகளை பார்க்கவும்.

**02. விரிவுரையாளர் பதவி (பதவியில் நிரந்தரமாக்கப்படாத)**

1. விண்ணப்பதாரர்கள் 721 இன் 01 ஆம் இலக்க UGC சுற்றறிக்கையின் (1) ஆம் அல்லது (2) ஆம் இலக்கப் பதவி வகுதியின் பிரகாரம் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறு விரிவுரையாளர்களுக்கான கல்வித் தகைமைகளை (தகுதிகாண்) (மருத்துவ /பல் மருத்துவ) பெற்றிருத்தல்.

அத்துடன்

2. மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம் **(PGIM)** வழங்கும் ஒரு MD/MS சபை சான்றிதழை அல்லது அல்லது **08/2016** ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் **3(B) (ii)** இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு குறித்த பிரிவில் ஒரு முதுமானிப் பட்டத்தை அல்லது டாக்டர் பட்டத்தை பெற்றிருத்தல்.

தயவுசெய்து 2018.08.02 ஆம் திகதிய 07/2018 ஆம் இலக்க UGC சுற்றறிக்கையின் 3 (a) பதவியின் கீழ் தரப்பட்டுள்ள குறிப்புகளை / விஷேட குறிப்புகளை பார்க்கவும்.

**03. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்)**

i. முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) கௌரவ MBBS பட்டத்தையும் குறைந்தது கற்பித்தலில்/ஆராய்ச்சியில்/தொழில்சார்ந்த பணியில்/பட்டப்பின்படிப்பு கற்கைகளில் ஒரு (01) வருட கால அனுபத்தையும் பெற்றிருத்தல். இரண்டாம் அல்லது மூன்றாம் MBBS ஆம் பரீட்சையில் முதலாம் அல்லது

இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு பட்டம்) பட்டத்தை பெற்றுள்ள ஒரு விண்ணப்பதாரரும் மருத்துவ பீடத்தில் ப்ரீ-க்ளினிக்கல் அல்லது பரா-க்ளினிக்கல் பாடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கு கருத்திற்கொள்ளப்படலாம்.

அல்லது

ii. முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) கௌரவ MBBS பட்டத்தையும் குறைந்தது கற்பித்தலில்/ஆராய்ச்சியில்/தொழில்சார்ந்த பணியில்/பட்டப்பின்படிப்பு கற்கைகளில் ஒரு (01) வருட கால அனுபத்தையும் பெற்றிருத்தல். இரண்டாம் அல்லது மூன்றாம் MBBS ஆம் பரீட்சையில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு பட்டம்) பட்டத்தை பெற்றுள்ள ஒரு விண்ணப்பதாரரும் மருத்துவ பீடத்தில் ப்ரீ-க்ளினிக்கல் அல்லது பரா-க்ளினிக்கல் பாடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கு கருத்திற்கொள்ளப்படலாம்.

அல்லது

iii. ஆய்வறிக்கை/ஆய்வுக் கட்டுரை வழியில் ஒரு ஆராய்ச்சிக் கூறுடன் உரிய பாடத்தில் ஆகக்குறைந்தது 02 கல்வி ஆண்டு கால MBBS பட்டத்தையும் ஒரு பட்டப்பின்படிப்புப் பட்டத்தையும் பெற்றிருத்தல்.

அல்லது

iv. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் குழுவின் சிபாரிசின் பேரில் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்படலாம் எனும் அத்தகைய தொழில் தகைமைகளையும் மற்றும் தொழில் அனுபவத்தையும் பெற்றிருத்தல்.

**விஷேட குறிப்புகள்**

01. 721 ஆம் இலக்க UGC சுற்றறிக்கையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் (2) ஆம் அல்லது (3) ஆம் வகுதியின் கீழ் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள், தேர்வுக் குழுவினால் கிடைக்கக்கூடியதாக இல்லையென அல்லது மதிப்பிடப்பட்டு திருப்தியற்றது எனக் கருதப்படும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் (1) ஆம் வகுதியின் கீழ் தகுதியுடையவர்களாக இருந்தால் மட்டும் நியமனத்திற்காக கருத்திற்கொள்ளப்படக் கூடும்.

02. கல்வி மற்றும் கல்வி துணைப் பதவிகளுக்கான விண்ணப்பதாரர்கள் அவர்களின் கற்பித்தல் ஆற்றலை நிரூபிக்கும் பொருட்டு தேர்வுக் குழுவின் முன்னிலையில் விளக்க சமர்ப்பணத்தை (ஆங்கிலத்தில்) செய்யுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

03. தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் தற்பொழுது அரசாங்கத் திணைக்களங்களில் பணியாற்றினால் அவர்கள் பொது நிருவாக அமைச்சின் ஊடாக விடுவித்துக்கொள்ள வேண்டும். அரசாங்க ஊழியர்கள் பல்கலைக்கழக சேவையிலிருக்கும் போது அவர்களின் ஒய்வூதிய உரிமைகளை பேணுவதற்கு உரித்துக் கிடையாது.

**சம்பள அளவுத்திட்டங்கள்**

01. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் I
U-AC3 (I) ரூ.91, 310-7x2, 170-106,500 மாதாந்தம்+ (189% கல்விசார் கொடுப்பனவு+ அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

02. சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி தரம் II
U-AC3 (II) ரூ.79, 360-11x1, 630-97,290 மாதாந்தம்+ (189% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

03. விரிவுரையளார் பதவி (நிரந்தரமாக்கப்படாத)

U-AC3 (III) ரூ.69, 580-5x1, 630-77,730 மாதாந்தம்+ (164% கல்விசார் கொடுப்பனவு+அனுமதிக்கப்பட்டுள்ள

ஏனைய கொடுப்பனவுகள்):-

04. விரிவுரையாளர் பதவி (தகுதிகாண்)
U-AC3 (IV) ரூ.54, 600-10x1, 335-67,950 மாதாந்தம்+ (144% கல்விசார் கொடுப்பனவு + அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள்)

***விஷேட குறிப்பு:*** பட்டப்பின்படிப்பு தகைமைகள் (MD) உள்ள அல்லது சபை சான்றிதழை பெற எதிர்பார்த்திருக்கின்ற பரீட்சாத்திகளுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**ஏனைய நன்மைகள்**

- ஏற்புடைய பதவிகளுக்கான சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறைகள், கல்விக் கொடுப்பனவுகள் மற்றும் ஆராய்ச்சிக் கொடுப்பனவு
- ஊசேநி, ஊநநி, பணிக்கொடை
- இலவச சுகாதாரக் காப்புறுதி
- வருடாந்த மிகைவூதியங்கள்
- ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள்
- KDU பல்கலைக்கழக வைத்தியசாலையில் முன்னுரிமை அடிப்படையிலான சிகிச்சைகள்
- நலன்புரி, போக்குவரத்து மற்றும் ஏனைய சிறப்புரிமைகள்